

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41 கதிர் : 113

வியாழக்கிழமை 19 மார்ச் 2026

பங்குனி 04 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12

விலை – ரூபா 50

# கோத்தாபய ராஜபக்சவின் தலைவிதியே அநுரவுக்கும்

## மோசமான முறையில் விரட்டப்படுவார் என முன்னாள் அமைச்சர் ஹரின் எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 19**

**முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எவ்வாறு நாட்டிலிருந்து விரட்டப்பட்டாரோ, அதைவிட மோசமான நிலைமை தற்போதைய ஜனாதிபதி அநுரவுக்கு ஏற்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் ஹரின் தெரிவித்தார்.**

»11

# மின் கட்டணம் எகிற வாய்ப்பு

## 13.56 வீதத்தால் உயர்த்துமாறு கோருகின்றது மின்சாரசபை

கொழும்பு, மார்ச் 19
மின்சாரக் கட்டணத்தை 13.56 வீதத்தால் உயர்த்துமாறு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.
ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான காலப்பகுதியில் நிலவும் 15.8 பில்லியன் ரூபா வருமானப் பற்றாக்குறையை ஈடுகட்டவே இந்தக் கட்டண உயர்வு

»11

# வாகன இலக்க அடிப்படையியே இனி எரிபொருள்கள்

கொழும்பு, மார்ச் 19
வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்துக்கு அமையவே இன்றிலிருந்து எரிபொருள் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.
பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருண இது தொடர்பில்

»11

கேப்பாபிலவு காணிவிடுவிப்பு

# பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டது அறிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 19
முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி செயலகம் அறிக்கை கோரியுள்ளது.
கேப்பாபிலவு பகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணி

»11

# புதன்கிழமை தோறும் வீட்டிலிருந்து வேலை

## பொதுவிடுமுறை பொருத்தமற்றது என பேராதனைப் பேராசிரியர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 19
புதன்கிழமைகளில் பொது விடுமுறை அறிவிப்பதற்குப் பதிலாக, வீட்டிலிருந்து வேலை என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட

»11

## கடற்றொழிலைப் பாதுகாக்க விசேட எரிபொருள் திட்டம்!

விரிவு பக்கம்:- 03

# காங்கேசன் – நாகப்பட்டினம் கப்பல்சேவை நெருக்கடியில்

யாழ்ப்பாணம், மார்ச் 19
காங்கேசன்துறை நாகப்பட்டினம் இடையேயான கப்பல் சேவை இயந்திரக் கோளாறு காரணமாக மீண்டும் நெருக்கடி நிலையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. காங்கேசன்துறை - நாகப்பட்டினம் துறைமுகங்களை மையமாக வைத்து, இலங்கை - இந்தியா இடையில்

»11

# வடக்கு மாகாணத்தில் வெப்பம் உக்கிரமாகும்

யாழ்ப்பாணம், மார்ச் 19
வடக்கு மாகாணத்தில் வெப்பம் இன்று மேலும் உக்கிரம்பெறும் என்று வளிமண்டலவியல் திணைக்களம்

»11

# எரிசக்தி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## இன்று சபாநாயகரிடம் கையளிப்பு



கொழும்பு, மார்ச் 19
எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபாநாயகரிடம் இன்று கையளிக்கப்படும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடிக்கு, வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடியின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் பிரதான

»11



“இந்த எரிபொருள் தட்டுப்பாட்டிலையும் விபத்துகளுக்கு மட்டும் குறைவில்லை கண்டியளோ”

முச்சந்தி முரளி

இ.போ.ச. பேருந்துகள்

# கதிர்காமத்தில் கோரவிபத்து 4 பயணிகள் பரிதாபச் சாவு!

## 40 பேர் படுகாயம்: பலர் கவலைக்கிடம்



கொழும்பு, மார்ச் 19
அம்பாந்தோட்டை - கதிர்காமம் பிரதான வீதியில் இ.போ.ச.வுக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகள் நேற்று நேருக்கு நேர் மோதி விபத்

»11

கறுப்புக்கொடி விவகாரம்

# விசாரணைகளை எதிர்த்து மாணவர்கள் இன்று போர்!

யாழ்ப்பாணம், மார்ச் 19
சுதந்திரதினத்தன்று தேசியக் கொடியைக் கீழிறக்கி கறுப்புக்கொடி ஏற்றப்பட்ட விவகாரத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் விசாரணைக்கு அழைக்கப்பட்டதைக் கண்டித்து இன்று போராட்டம் இடம்பெறவுள்ளது.
சுதந்திரதினத்தை கரிநாளாக அறிவித்து தமிழர் தாயகத்தில் இம்முறை போராட்டங்களும் பேரணி

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4379 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 05 27 53 56 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1446 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 09 30 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0405 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 2 3 8 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2485 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 04 41 55 63 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6137 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 8 3 0 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2167 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 26 47 71 81 |
| விசேட எழுத்து | M |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 18.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0253 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 13 20 23 |

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச நெறிமுறை அவசியம்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை

**கொழும்பு, மார்ச் 19**

**சிறுவர் உரிமைகள் மீதான உடன்படிக்கையின் தொடர்பாடல் நடைமுறை குறித்த மூன்றாவது விருப்பத்தேர்வு நெறிமுறையை இலங்கை அரசாங்கம் உடனடியாக அங்கீகரிக்கவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது.**

1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நெறிமுறையை அங்கீகரிப்பதன்மூலம் சிறுவர் விவகாரம் சார்ந்த நீதிக்கான அணுகல் சர்வதேசமட்டத்தில் வலுப்படுத்தப்படும்.

உள்நாட்டில் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும்போது, அவற்றுக்கான தீர்வுகளைச் சர்வதேச தரங்களுக்கு அமைவாகவும் துரிதமாகவும் பெற்றுக்கொள்ள இது வழிவகுக்கும். மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் இலங்கை கொண்டுள்ள சர்வதேசக் கடப்பாடுகளை உறுதிப்படுத்த இது உதவும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 18.03.2026 | புதன்கிழமை | 0845 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Z | 8 7 1 5 9 3 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.03.2026 | புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3111 | J | 06 42 63 64 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.03.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 05 07 41 46 | 5272 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 18.03.2026 | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0941 | 06 23 45 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.03.2026 | புதன்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 21 24 43 45 | 4823 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 18.03.2026 | புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 32 | 15 61 62 69 | 2287 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 18.03.2026 | புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 13 38 43 53 | 2937 |

## எரிபொருள் நெருக்கடியால் பாடசாலைகளுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, எரிசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக பாடசாலைகளின் தினசரி நிர்வாக மற்றும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் கல்வி அமைச்சு சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவவின் கையொப்பத்துடன் இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்படவுள்ள அனைத்துச் சுற்றுலாக்களும் மறுஅறிவித்தல்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவேண்டும்.

பாடசாலைகளில் நடத்தப்படும் விழாக்கள் அல்லது நிகழ்ச்சிகளின்போது எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டும். குறிப்பாக, அதிகளவில் எரிபொருள் செலவாகும் வாகனப்பேரணிகள் போன்றவற்றை நடத்துவது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அதேநேரம், பாடத்திட்டங்களை முடிப்பதற்கான காலம் குறைவாக இருப்பதால், பாடசாலை நேரத்தை விழாக்கள் அல்லது வெளி நிறுவனங்களின் நிகழ்ச்சிகளுக்காகப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும். புதன்கிழமைகளில் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே சுயகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மேலதிக பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிலைமை சீரடைந்ததும் பாடசாலைகளை வழமைப்போல நடத்துவது குறித்த மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொதுப்போக்குவரத்தில் நேற்று நெரிசல் பயணம்

கொழும்பு, மார்ச் 19

நேற்றுப் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருந்தநிலையில், பொதுப்போக்குவரத்தில் நெரிசலுக்கு மத்தியில் பயணிகள் பயணிக்க வண்டியிருந்தது என்று கூறப்படுகின்றது.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, வாராந்தம் புதன்கிழமையை அரசாங்கம் பொதுவிடுமுறை தினமாக அறிவித்துள்ளது. புதன்கிழமைகளில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் மட்டுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் தனியார் துறை நிறுவனங்கள் வழமை போன்று இயங்குவதால், நேற்றுக் காலை பஸ்கள் மற்றும் ரயில்களில் அதிகளவிலான பயணிகள் பயணிக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



### புதன்கிழமை விடுமுறை

## தனியார் துறையினரும் சாத்தியத்தை ஆராய்க

### தொழில் அமைச்சு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 19

அரசாங்க அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள புதன்கிழமை விடுமுறை முறையை, தனியார் துறையினரும் தங்களது சாத்தியப்பாடுகளுக்கு ஏற்ப பின்பற்றவேண்டும் என்று தொழில் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது-

புதன்கிழமைகளில் விடுமுறை வழங்குமாறு தனியார் துறையினரை அரசாங்கம் கட்டாயப்படுத்தவில்லை. எனினும், அரச அலுவலகங்களின் வேலைத்திட்டத்துடன் ஒத்துப்போகக்கூடிய நிறுவனங்கள் இதைப் பரிசீலிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்கள் பலவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்குதாரர்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், திடீரென விடுமுறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அரசாங்கம் புரிந்துகொண்டுள்ளது.

இந்தத் தீர்மானமானது தொழிலாளர் உரிமைகள் மற்றும் தொழில்துறைகளில் ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கம் ஆகிய இரண்டையும் சமமாக ஆராய்ந்த பின்னரே எடுக்கப்படவேண்டும்-என்றார். (எ-இ)

## க்ளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் 'கலைமதி' கிராமம் தெரிவு!

யாழ்ப்பாணம், மார்ச் 19

நாட்டைக் கட்டியெழுப்பும் 'வளமான கிராமம்' திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 'கலைமதி' கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசேட வேலைத்திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் நேற்று ஆரம்பித்துவைத்தார்.

ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இந்தக் கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலைப் பாதுகாக்க விசேட எரிபொருள் திட்டம்!

**கொழும்பு, மார்ச் 19**

**தற்போதைய எரிபொருள் நெருக்கடிச் சூழலிலும் மீன்பிடித் தொழிலைப் பாதிக்கப்படாமல் முன்னெடுத்துச் செல்வதற்காகப் புதிய எரிபொருள் முகாமைத்துவத்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படுவதாகக் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.கே. கோலித கமல் ஜினதாச தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பலநாள் மீன்பிடிக் கலன்களுக்கு அந்தந்த மீன்பிடித் துறைமுகங்கள் ஊடாகவே எரிபொருள் விநியோகிக்கப்படும். கடற்றொழில் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள சுமார் 100 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக எரிபொருள் வழங்கப்படும். நாட்டில் நாளாந்தம் இயங்கும் சுமார் 30,000 சிறிய படகுகளுக்கு, ஒரு நாளைக்கு 25 லீற்றர் வீதம், 5 நாள்களுக்கு ஒரு முறை மொத்தம் 125 லீற்றர் எரிபொருள் விநியோகிக்கப்படும். நெடுந்தீவு மற்றும் பத்தலங்குண்டுவ ஆகிய தொலைதூரப்பிரதேசமீனவர்களுக்குத் தேவையான எரிபொருளைக் கொண்டு சேர்ப்பதில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மீன் பண்ணைகள் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள மின்பிறப்பாக்கிகளுக்குத் தேவையான எரிபொருளை, இலங்கை கனிப்பொருள் எண்ணெய் கூட்டுத்தாபனத்துடன் எட்டப்படும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளமுடியும். புதன்கிழமைகளில் அமைச்சுக்கு விடுமுறை அளிக்கப்பட்டாலும், அத்தியாவசியசேவைகளை முன்னெடுக்கக் குறைந்தபட்ச ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**இஸ்ரேல் வாழ்**

## இலங்கையர்களுக்கு விசாக்காலம் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 19

விடுமுறை மற்றும் இதர காரணங்களுக்காக இஸ்ரேலிலிருந்து வெளியேறியுள்ள பணியாளர்களின் விசாக் காலம் ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். அதன்படி, பெப்ரவரி 28ஆம் திகதி முதல் ஏப்ரல் 21ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காலாவதியான அல்லது காலாவதியாகவுள்ள மீள் நுழைவு விசாக்கள் ஏப்ரல் 30 வரை நீடிக்கப்படவுள்ளது.

இதற்காகத் தனியாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் இலங்கைத் தூதுவர் குறிப்பிடப்பட்டுள்ளார். (ச-இ)

## அமெரிக்காவிடமிருந்து 10 ஹெலிகொப்டர்கள்

கொழும்பு, மார்ச் 19

அமெரிக்காவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10 உலங்கு வானூர்திகள் தற்போது இலங்கையை நோக்கிப் புறப்பட்டுள்ளதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த உலங்கு வானூர்திகள் கடந்த 15ஆம் திகதி அமெரிக்காவின் அலபாமாவிலுள்ள மொபைல் துறைமுகத்திலிருந்து இலங்கையை நோக்கிப் புறப்பட்டுள்ளன.

இவை எதிர்வரும் மே மாதம் 24ஆம் திகதி இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)



## கோத்தாபயவிடம் இருமணிநேரம் விசாரணை


கொழும்பு, மார்ச் 19

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்த காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவரிடம் விசாரணை நடத்தியது. சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் இந்த விசாரணைகள் இடம்பெற்றது.

கோத்தாபய ராஜபக்சவிடம் வாக்குமூலம் ஒன்றினைப் பதிவுசெய்த பின்னர், அவர் அங்கிருந்து வெளியேறிச் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்தது. (ச-இ)

## எரிவாயுக் கப்பல்கள் நாட்டுக்கு வருகை

நாட்டில் நிலவும் எரிவாயுத் தட்டுப்பாட்டைச் சீர்செய்யும் வகையில், திரவப் பெற்றோலிய எரிவாயு ஏற்றிய இரண்டு கப்பல்கள் நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்துள்ளன. இந்தக் கப்பல்களிலிருந்து, எரிவாயுவைத் தரையிறக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மார்ச் மாதத்துக்கு 33,000 மெட்ரிக்தொன் எரிவாயுவே தேவையாயிருந்தது. எனினும், ஒரு தனியார் நிறுவனம் விநியோகத்தை முடக்கியுள்ளதால், முன்னெச்சரிக்கையாக 38,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை லிட்ரோ நிறுவனம் ஊடாக அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது. (ச-இ)






## இதிலையும் இறக்குமதியோ?

எல்லாரும் வேற எங்கையும் பிராக்குப் பாத்துக் கொண்டிருக்கேக்க, அதைப் பாவிச்சு 'நைஸா' தங்கட காரியங்களை சத்தமில்லாமல் செய்யிற ஆக்கள் கனபேர் இருக்கினம். அதைமாதிரி இஞ்ச எல்லாரும் பெற்றோல், கியூ. ஆர். சாமான்விலையேத்தம் எண்டு ஓடுப்பட்டுத் திரியிற நேரத்தில நல்லை ஆதினகுரு விசயத்தில ஒரு தரப்பு கடுமையா காய்நகர்த்த வெளிக்கிட்டிருக்குது.

கனகாலமா நல்லை ஆதீனத்தின்ர பொறுப்பில இருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியர். இந்த ஆதீனம் தான் யாழ்ப்பாணத்தில உள்ள சைவசமயக்காரரின்ர ஒரு தலைமைப்பீடம் மாதிரி இருந்தது. அவரைத்தான் சைவ சமயத்தின்ர பிரதிநிதியா எல்லா இடமும் கூப்பிட்டுக் கௌரவிப்பினம். ஆனால் அவரும் போன வருசம் காலமாயிட்டார். அவருக்குப் பிறகு ஆதீனத்துக்குப் பொறுப்பா, மூண்டாவது குருசந்நிதானமா இருக்க ஒருத்தரும் இல்லை. அதால ஆதீனம் கனகாலமா பூட்டுப்பட்டுத்தான் கிடக்குது. இப்பிடிப்பட்ட நிலையில ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியரை கடைசிக்காலத்தில பராமரிச்ச ஒரு தரப்பு, ஆதீனத்தின்ர முழுக்கட்டுப்பாட்டையும் தங்கட கையுக்க கொண்டந்திட்டுது. ஆனாலும் அவையளும் அந்த ஆதீனத்தை திரும்பத் திறந்து, அதுக்கு இன்னொரு பொருத்தமான ஆளை ஆதீனகுருவாப் போடுறதைப் பற்றி யோசிக்காமல், தங்கட பாட்டில இருந்திருக்கினம். அப்பிடி அவை இந்த விசயத்தை ஆறப்போட்டத்துக்கும் ஒரு காரணம் இருக்காம்.

இப்ப என்னவெண்டால், அந்தப் பொறுப்புக்கு இவையின்ர கண்ணுல, இஞ்சையிருக்கிற ஒருத்தரும் பொருத்தமாப் படேலையாம். அதால இப்ப இந்தியாவில இருந்து ஒருத்தரை 'இறக்குமதி' செய்து கொண்டந்து, அவருக்கு இந்தியாவில இருக்கிற இன்னொரு ஆதீனத்தில இருக்கிற குருமகா சந்நிதானம் மூலம் கொஞ்சக் காலத்துக்கு 'ட்ரெயினிங்' குடுத்து, பிறகு அவரையே நல்லை ஆதீன குரு முதல்வராப் போடுறதுதான் அந்தத் தரப்பின்ர பிளானாம். ஆருக்கும் தெரியாமல் நடந்த இந்த விசயங்கள் எப்பிடியோ வெளியில 'லீக்'ஆனதும், சைவத்தில உண்மையா பற்றுள்ளவையும், ஐயர்மாரும் அந்தத் தரப்புக்கு எதிராப் பொங்கி எழும்பிட்டினம். 'ஏதோ சமயத்துக்கு சில நல்லதுகளைச் செய்யினம் எண்டாப் போல ஒட்டுமொத்தச் சைவசமயத்தையும் அவைக்கு எழுதி வைச்சமாதிரி, தங்கட பாட்டில, தங்களுக்கு ஏத்தவையை ஆதீனமாக் கொண்டு வர ஒருக்காலும் இடமளிக்க மாட்டம்' எண்டு அவையள் அழுத்தம் திருத்தமாச் சொல்லி இருக்கினம்.

இந்தியாவில இருந்து ஆதீனப் பொறுப்புக்கெண்டு ஒருத்தரைக் கொண்டுவந்தால் , அப்பிடி வாறவர் இங்க இருக்கிற சூழலை எப்பிடி விளங்கிக்கொள்ளுவார்? யாழ்ப்பாணத்துக்காரரை யாழ்ப்பாணத்தாராலையே விளங்கிக்கொள்ள ஏலாது. அப்பவாறவர் யாழ்ப்பாணத்தை விளங்கிக் கொண்டு, அதுக்கேத்தபடி சமயப்பணி செய்யிறதுக்குள்ள அவரின்ர ஆயுளே முடிஞ்சுபோடும். நாங்கள் ஏற்கனவே இப்பிடி சில விசயங்களில இறக்குமதிக்காரரை நம்பி பாடாய்ப்பட்ட ஆக்கள் . மாகாணசபைத் தேர்தலில நேர்மையான ஆள் எண்டு சொல்லி ஒருத்தரைத்தான் இறக்குமதி செய்து தலையில தூக்கிவைச்சுக் கொண்டாடினம். கடைசியா என்ன நடந்ததெண்டு எல்லாருக்குமே தெரியும். அதால உந்த இறக்குமதி ஆதீனகுரு எண்ட கதையை விட்டிட்டு இஞ்சையுள்ளவைக்கு, இந்தியாவில இருந்து வாற வேற ஆதீனங்களுக்குப் பொறுப்பா இருக்கிறவையைக் கொண்டு, ட்ரெய்னிங் குடுத்து, அவையையே ஆதீனகுரு ஆக்கலாமெல்லோ. எங்கட ஊர்ல தகுதியான துறவிகளோ, சமயப் பெரியவர்களோ இல்லாமலா போயிட்டினம்? வீட்டுக்குள்ள ஆளைத் தேடாமல் கடல் தாண்டித் தேடுறது நல்ல பம்பல்தான். இந்த 'இறக்குமதி' அரசியலை விட்டிட்டு, உண்மையான சைவப் பற்றாளர்கள் ஒண்டு சேர்ந்து எங்கட பாரம்பரியத்தைக் காப்பாத்தப் பாருங்கோ. இல்லாட்டி, எங்களிட்ட மிச்சமாயிருந்த ஒரேயொரு ஆதீனமும் கடைசியில காட்சிப் பொருளாப் போயிடும் கண்டியளோ!

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 103 மருந்தாளர் பணியிடங்கள் வடக்கு மாகாணத்தில் வெற்றிடம்

## மருந்தாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

**வடக்கு மாகாணத்திலுள்ள அரச மருத்துவமனைகளில் நிலவும் 14 அரசாங்க மருந்தாளர்கள் மற்றும் 89 மருந்து வழங்குபவர்களுக்கான வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசாங்க மருந்தாளர் சங்கம் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஆளுநர் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

தற்போது 14 அரசாங்க மருந்தாளர்கள் மற்றும் 89 மருந்து வழங்குநர்களுக்கான வெற்றிடங்கள் மாகாணத்தில் நிலவுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பிராந்திய மருந்தாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதால் சேவை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. வவுனியா மற்றும் தெல்லிப்பழை மருத்துவமனைகளுக்கு விசேட தர ஆளணியை உருவாக்கவேண்டும்.

மருந்துகளைப் பாதுகாப்பாகச் சேமிப்பதற்கான களஞ்சிய அறைகளின் தேவை மற்றும் மருந்து விநியோகத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் பற்றாக்குறை குறித்தும் சங்கத்தினர் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், தெல்லிப்பழை மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவுகளுக்கான மருந்துக் களஞ்சியக் கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

மருந்தாளர்கள் கோரியுள்ள மேலதிக நேரக்கொடுப்பனவு தொடர்பாக ஆராய, வடமாகாணப் பிரதம செயலாளரின் தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்படும். உரிய அதிகாரிகளுடன் ஆலோசித்து, அமைச்சுச் சுற்றறிக்கைகளுக்கு அமைய வெற்றிடங்களை நிரப்பவும் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-66)

# போதைமாத்திரைகளுடன் தெல்லிப்பழையில் மூவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 19

தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகாமையில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் காங்கேசன்துறை மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட ரோந்துப் பணியின்போது இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றது. சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரைப் பொலிஸார் சோதனையிட்டபோது அவரது உடைமையிலிருந்து 4 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த மேலும் மூன்று இளைஞர்களுக்கு இதில் தொடர்பிருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து மயிலங்காட்டுப் பகுதிக்கு விரைந்த பொலிஸார், அங்கு முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையில் மேலுமிரு இளைஞர்களைக் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து 12 போதைமாத்திரைகள் மீட்கப்பட்டன. கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-23)



# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.புஸ்பரட்ண தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்ணியல் துறை, மருத்துவபீடப் பேராசிரியர் கலாமதி முருகானந்தன், சிறப்பு விருந்தினர்களாக புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய அதிபர் பொ.கேதீஸ்வரன், மகாஜனக் கல்லூரி ஓய்வுநிலை உப அதிபர் திருமதி மோகனவதனி ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

# பருத்தித்துறை கரையோரத்தில் கடல் மணல் பரவும் பணி நிறைவு!

யாழ்ப்பாணம், மார்ச் 19

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் உள்ள மீன்பிடித்துறைகளின் முகத்துவாரங்களின் அகழ்வின்போது வெளியேற்றப்பட்ட மணலைப் பரவும் பணிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கடந்த சில மாதங்களாக வடமராட்சி வடக்குப் பகுதிகளில் மீன்பிடித்துறைகளைச் சீரமைக்கும் நோக்கில் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது பெருமளவிலான மணல் வெளியேற்றப்பட்டது. இந்த மணலை அந்தந்த உள்ளூராட்சிமன்றங்களின் ஒத்துழைப்புடன் பொருத்தமான இடங்களில் பரவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.


பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல், நகரசபையின் நேரடிப் பங்களிப்புடன் பரப்பப்பட்டு வந்தது. அதன் இறுதிக்கட்டமாக தும்பளை கிழக்கு மூர்க்கம் பகுதியில் எஞ்சியிருந்த மணல் பரப்பப்பட்டது. இந்த வேலைத்திட்டம் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதியொதுக்கீட்டில், அவர்களின் நேரடி மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடைபெற்றது. பருத்தித்துறை நகரசபையா ஒப்பந்த அடிப்படையில் இதற்கான வாகன வசதிகளை வழங்கியிருந்தது. (ச-100)

# நறுவிலிக்குளம் அ.த.க.வில் பெரும் வளப்பற்றாக்குறை

## நேரடியாக ஆராய்ந்தார் ரவிகரன் எம்.பி.

மன்னார், மார்ச் 19

மன்னார் நறுவிலிக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிகமான வளப்பற்றாக்குறைகள் நிலவும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அண்மையில் நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டார். பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நலன்புரிச்சங்கத்தினருடன் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்துரையாடியபோது, 8 ஆசிரியர் ஆளணிப்பற்றாக்குறை, 60 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வகுப்பறைக் கட்டடங்கள், வகுப்பறை வசதிகள் இன்மை, திறன் வகுப்பறை, ஆசிரியர்களுக்கான ஓய்வறை, தளபாடவசதிகள் இன்மை, விளையாட்டு உபகரணங்கள் இன்மை, குடிதண்ணீர், போதுமான மலசல கூடவசதிகள் இன்மை உள்ளிட்ட விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டது. பாடசாலையில் காணப்படும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மனுவும் கையளிக்கப்பட்டது. (க-246)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



## பொய்யாமொழி

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை**

**பொருள்:** அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்; ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது.


# பட்டும் புத்தியில்லை...!

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல், ஒட்டுமொத்த எரிபொருள் சங்கிலியையும் தாறுமாறாக அறுத்துச் சின்னாபின்னமாக மாற்றிவிட்டிருக்கின்றது. இந்தப் போரில் கொஞ்சம்கூட தொடர்பில்லாத பல நாடுகளின் பொருளாதாரம்கூட சிதிலமடையத் தொடங்கியுள்ள நிலையில், அந்தப் பட்டியலில் இலங்கையும் இணைந்துள்ளது. அந்த வகையில், அனல் மின்சக்தியை முற்றாக நம்பியிருப்பது எவ்வளவுதூரம் ஆபத்தானது என்பதை மீண்டும் ஒருமுறை வலுவாக உணர்ந்துள்ளது இலங்கை. ஆனால், இந்த நீண்டகாலச் சபிக்கப்பட்ட போக்கை இனியாவது 'ஒரு நாடாக' இலங்கை கைவிடுமா? மாற்றுத்திட்டங்களில் வெற்றிபெறுமா? என்றால், அந்தக் கேள்விகளுக்கான பதிலை உறுதிபடக் கூற முடியாத நிலையே தற்போது காணப்படுகின்றது.

இலங்கைக்கும் எரிசக்திக்கும் இடையிலான போராட்டம் மிகப்பெரியது. எரிசக்திக்காக மாதம்மாதம் டொலரைச் செலவிடும் 'சிந்தனை வறட்சியுடைய நாடாகவே' இலங்கை இன்றளவும் இருந்துவருகின்றது. இந்த நிலைமை மாறவேண்டுமென்றால், நிலக்கரி, பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்களை நம்பியிருக்காமல், சூரிய மின்சக்தி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திக் கலாசாரத்துக்கு நாங்கள் முன்னேறவேண்டும். ஒரு தீவு நாடு என்ற வகையில் இந்தத் திட்டத்தை இலங்கையால் மிக இலகுவாக மேற்கொண்டிருக்கமுடியும். ஆனால், ஓர் அச்சில் சுழலும் செக்கு மாட்டைப் போன்றுதான்

பட்டன. எரிபொருள்களைப் பெறுவதற்கான டொல ரைத் தேடுவதில்தான் இலங்கை இதுவரை கவனம் செலுத்தியதே தவிர, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தியில் முதலிடவேயில்லை. உலகிலுள்ள பல நாடுகள் இன்று புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்திக்கு மாறியுள்ளன. அமெரிக்காவில் ஆரம்பித்த இந்தக் கலாசாரம், பின் னர் ஐரோப்பாவிலும் கனடா, அவுஸ்திரேலியாவிலும் வலுவாக நடைமுறைப்படுத்தப்பட்டு, இன்று அரபு நாடுகளாலும் மத்திய கிழக்கு நாடுகளாலும் பின்பற்றத் தலைப்பட்டிருக்கின்றது. மத்திய கிழக்கு நாடுகளிலும் அரபு நாடுகளிலும் அள்ளஅள்ளக் குறையாத கச்சா எண்ணெய் நிறைந்திருக்கையில், அந்த நாடுகள் கூட 'புதைவடிவ எரிசக்தி' கொள்கையை கைவிட்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறிவருகின்றன. இவ்வாறிருக்கையில், இலங்கை இன்னமும் முன்னைய அச்சில் சுழன்று கொண்டிருப்பது அபத்தமானது. இந்தப் பிறழ்வான சிந்தனை இனியும் தொடரத்தான் போகின்றது என்பதே கசப்பான உண்மை.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு, நாட்டின் எரிபொருள் சேமிப்புத்தளங்கள் மட்டுப்பாடான அளவில் உள்ளமையே பிரதான காரணம் என்றுதான் திசைகாட்டி அரசாங்கத்தின் பிரதானிகள் கூறுகின்றனர். எரிபொருள் சேமிப்புத்தளங்களின் கொள்ளளவை இருமடங்காக அதிகரிக்கவேண்டும் என்று அவர்கள் பரிந்துரையும் முன்வைக்கின்றனர். நாட்டில் தற்போதுள்ள எரிபொருள் சேமிப்புத்தளங்களில் இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருளையே சேமிக்கமுடியும் எனும்போது, அந்தக் கொள்ளளவை இரு மடங்காக அதிகரித்தால் ஆகக்கூடியது நான்கு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள்களையே சேமிக்க ஏதுவாக இருக்கும். அவ்வாறெனில், எட்டு மாதங்கள் வரையோ அல்லது ஒரு வருடம் வரையோ எரிபொருள் கிடைக்கவில்லையெனில் என்ன செய்வது? புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மட்டுமே அனைத்துக்குமான தீர்வு. அதில், நாம் முதலிடவேண்டும். பட்ஜெட்டில் பல பில்லியன்களை விழுங்கும் தேவையற்ற துறைகளை, புதுப்பிக்கத்தக்க மின்சக்திக்காகத் திறந்து விடுவதே புத்திசாலித்தனம்.






## லண்டன் - கொழும்பு நேரடி விமானசேவை

கொழும்பு, மார்ச் 19

2026 குளிர்கால அட்டவணைக்கான தனது வலையமைப்பை விரிவுபடுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக லண்டன் கொட்விக் - கொழும்பு நேரடி விமான சேவையை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக பிரிட்டிஷ் எயார்வேஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. 2015ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கைக்கு மீண்டும் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்ரோபர் 23ஆம் திகதி முதல் வாரத்துக்கு மூன்று முறை இந்த விமானசேவையை இயக்கத் திட்டமிட்டுள்ளது. (ச-இ)

### கடந்தாண்டில்

## இலங்கைப் பொருளாதாரம் 5.0 வீதம் வளர்ச்சிப் பதிவு!

**கொழும்பு, மார்ச் 19**

**2025ஆம் ஆண்டில் இலங்கையின் உள்நாட்டு உற்பத்தி 13,128,577 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இது 5.0% வளர்ச்சி என மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டில் நிலையான விலையில் 12,508,954 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்தது. பொருளாதாரத்தின் பிரதான மூன்று துறைகளான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் முறையே 2025ஆம் ஆண்டில் 1.4%, 7.8% மற்றும் 3.3% என்ற வீதத்தில் வளர்ச்சியடைந்துள்ளன.

2025ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4.8% மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆண்டிறுதியில் பொருளாதார நடவடிக்கைகளின் நேரடி வளர்ச்சியைக் காட்டுகின்றதெனவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 19

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுமுன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 307ரூபா 73 சதமாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 315ரூபா 30 சதமாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் வளைகுடா நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. (ச-இ)

## ட்ரோன்கள் பறக்கவிட அனுமதி அவசியம்!

இலங்கையில் முறையான அனுமதியின்றி ட்ரோன் கமராக்களைப் பறக்கவிடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்று இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. ட்ரோன்களைப் பறக்கவிட விரும்பும் எவராவது இருந்தால், அவர்கள் இலங்கையின் தற்போதைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய உரிய அதிகாரிகளிடம் இருந்து முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## குஷ் போதையுடன் இருவர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 19

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது, சுமார் 10 கிலோகிராம் 'குஷ்' போதைப்பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் 22 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் தாய்லாந்தின் பாங்கொக்கிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்தடைந்துள்ளனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்தித் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சனிப்பெயர்ச்சிப் பலன்

எதிலும் நிதானத்தைக் கடைபிடித்துக் காரியங்களைக் கரைசேர்க்கும் மிதுன ராசிக்காரர்களே! உங்கள் ராசிக்கு, 10ஆம் வீட்டில் சனி அமர்கிறார். எதிலும் நல்லதே நடக்கும். இதுவரையிலும் ஏதேதோ காரணங்களால் தடைப்பட்டுக் கொண்டிருந்த வேலைகள் இனிப் பூர்த்தியாகும். பூர்விகச் சொத்துப் பிரச்சினைகளில் நல்ல தீர்வு கிடைக்கும்.

வீடு கட்டுவதற்கு வங்கிக்கடன், குழந்தைப் பாக்கியம் எதிர்பார்த்திருக்கும் அன்பர்களுக்கு குழந்தை வரம், உறவுகளிடையே இணக்கம், சொந்த ஊரில் மதிப்பு அந்தஸ்து ஆகிய அனைத்து விஷயங்களும் கிடைக்கும் காலம் இதுவாக இருக்கும்.

இந்தச் சனிப்பெயர்ச்சியில் வரும் ஏப்ரல்2 வரை குடும்பத்தில் கவனம் தேவை. உங்களின் பாதகாதிபதியான குருவின் பூரட்டாதி நட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் என்பதால், வீட்டில் வீண் வாக்குவாதங்கள் வேண்டாம். விலையுயர்ந்த பொருள்களைக் கவனமாகக் கையாளுங்கள்.

சனி பகவான் உத்திரட்டாதியில் பயணிக்கும் காலமான 2.4.2026 முதல் 14.4.2027 வரை, எதிர்பாராத பணவரவு, எடுத்த வேலையில் வெற்றி உண்டு. வெளிநாட்டு நண்பர்கள் உறவுகள் மூலம் ஆதாயம் கிடைக்கும். புதிய சொத்து வாங்குவீர்கள். பிள்ளைகளுக்குத் தடபுடலாக திருமணம் முடியும்.

எனினும் சனிபகவானின் வக்ர சஞ்சார காலத்தில் 15.7.2026 முதல் 30.11.2026 வரை மற்றும் 28.7.2027 முதல் 13.12.2027 வரை அலைச்சல், காரியத் தடைகள் வந்துபோகும். செலவுகளைக் கட்டுப் படுத்துங்கள். யாரையும் விமர்சித்துப் பேச வேண்டாம்.

இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் சனிபகவான் உங்கள் ராசிக்கு 4, 7 மற்றும் 12ஆம் வீட்டைப் பார்க்கிறார். ஆகவே, தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தாய்வழியில் சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். மனைவியுடன் வீண் வாக்குவாதங்கள் வந்துபோகும். அவருக்குக் கர்ப்பப்பைக் கோளாறு, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்து நீங்க வாய்ப்பு உண்டு. சுப விரயங்கள் வரக்கூடும்.

இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்குக் குடும்பத்தில் அமைதி திரும்பும். பணிக்குச்செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். எதிர்பார்த்த சலுகைகளும் வந்து சேரும்.

வியாபாரத்தில், புதுப் பாய்ச்சல் காட்டுவீர்கள். எனினும் புது முதலீடுகளில் கவனம் தேவை. போட்டிகளை முறியடிப்பீர்கள். பழைய கடையைப் புதுப்பித்து விரிவுபடுத்துவீர்கள்.



## மிதுனம்

உத்தியோகத்தில், இப்போது சனி பகவான் ராசிக்கு 10 ஆம் வீட்டில் வந்து அமர்வதால், வேலைச்சுமை அதிகரிக்கத்தான் செய்யும். எனினும், மேலதிகாரி ஆதரவாக இருப்பார். உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். மதிப்பு மரியாதை கூடும்

ஒருசிலருக்குப் பணியில் திடீர் இடமாற்றம் உண்டு. அடிக்கடி விடுப்பு எடுக்காதீர்கள். முக்கிய பதிவேடுகளைக் கவனமாகக் கையாளுங்கள். கணினித்துறையினருக்கு, அதிக சம்பளத்துடன் திடீர் இடமாற்றம் உண்டு.




# தலைமைக்கு ஏணி பணிவாழ்வே

தொண்டு ஏற்பது என்றும் கிறிஸ்தவத்தின் நிலையான ஏற்பாடு அல்ல. தொண்டாற்றவே இறைவார்த்தை அழைப்பு விடுக்கின்றது. இயேசுவின் அருகே இடம்பிடிக்க வடம் பிடித்துக் போடத்தேவையில்லை. எம் இதயத்தை தூய்மையாகப் பேணினால் அங்கே இறைவன் குடிகொள்வார்.

உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். முதன்மையானவர் ஆக இருக்கவிரும்புகிறவர் உங்களுக்கு பணியாளராக இருக்கட்டும் அவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மத்; 20 26;28)

பணிவாழ்வு என்பது தன்னை இழத்தலாகும். பட்டம்,பதவி, அதிகாரம், தலைமை எனும் கதிரைகளை விட்டிறங்கி மக்களின் முற்றத்திற்கு வந்து அவர்களின் குறைகளை நிறைவுசெய்வதாகும். அப்போது உண்மையான தலைவன் என்னும் எண்ணம் மக்கள் மனதை நிறைக்கும். அதிகாரம் கதிரையைத் தருவது பாமர மக்களின் உழைப்பும், வியர்வையும், ஆணையும் என்பதை நினைவில் கொண்டு பணியாற்றுவதே முதன்மையானருக்குரிய சிறப்பாகும். இயேசுவின் பணிவாழ்வும் இதனையே கற்றுத் தருகிறது. சிறந்த பணியாளனே மக்கள் தலைவனாவான்.

**யே.சுபீட்சன்**
**கொழும்புத்துறை**

# சைவப் புலவர் சங்க நிர்வாகசபை கூட்டம்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட நிர்வாகசபைக்கூட்டம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் சி.கா. கமலநாதன் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது 2026 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான நேரடி வழிகாட்டல் வகுப்பு ஆரம்பித்தல் பரீட்சை தொடர்பான விடயங்கள் மற்றும் முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-66)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

புலம்பெயர் வாழ் மற்றும் கருணையம்பதி வாழ் உறவுகளின் நிதியனுசரணையுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கருணையம்பதி சனசமூக நிலையம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.17 தொடக்கம் 10.47 வரையுள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கருணையம்பதி சனசமூக நிலைய அபிவிருத்திக்குழு தலைவர் த. செல்வகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராசா, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மேலதிக மாவட்டச் செயலர் நாகலிங்கம் கமலதாசன், யாழ் போதனா மருத்துவமனை சத்திரச் சிகிச்சை நிபுணர், கந்தசாமி உமாசங்கர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் குமாரசாமி சுரேந்திரன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி முன்னாள் அதிபர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், கரணவாய் தாமோதரா வித்தியாலய அதிபர் ஆனந்தராசா விமலராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-422)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 19

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் யே.தர்மதுரை தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. ஸ்ரீகுமரன் சிறப்பு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி சியாமளா கணராஜன், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி உதவி அதிபரும் பழைய மாணவருமான வி.மயூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

# மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 19

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.லினாஷ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தாபனம் மற்றும் பொது முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ம.கோணேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

# சைவப்புலவர் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான வழி காட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. 2026 ஆம் ஆண்டுக்கான பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இதில் கலந்து கொள்ளவும்.

பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை இந்த வகுப்புகள் இடம்பெறவுள்ளன. இலக்கணம் சாஸ்திரம் வரலாறு உரைநடை இலக்கியம் ஆகிய 5 பாடங்களும் கடந்த கால பரீட்சை வினாக்களுடன் வழி காட்டல் வகுப்பு இடம்பெறவுள்ளதனால் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்து பரீட்சார்த்திகளையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டின் மகிழ்ச்சிக்காகவே கியூ.ஆர். முறை நடைமுறையாம்

## ரஜீவன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 19**

**மக்கள் சித்திரைப் புத்தாண்டை மகிழ்ச்சியாகக் கொண்டாடவேண்டுமென்பதற்காகவே, கியூ.ஆர். முறையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தெரிவித்தார்.**

சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு, அல்வாய் வடக்கின் மகாத்மா கிராமத்தில் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கியூ.ஆர். முறைமை மூலம் எரிபொருள் பிரச்சினையைச் சமாளிக்க முடிந்துள்ளது. எனினும், போர் நீடித்தால் நிலைமைகள் சிக்கலாக மாறும். எனவே, மக்கள் எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும். 30 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் பொருளாதாரத்தை இழந்தோம். பல மக்கள் காணாமல் போனார்கள். கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்பட்டனர். இன்றும் பலர் கை, கால் இல்லாமல் வாழ்கின்றனர். அமைதி வேண்டும், உரிமை வேண்டும், சுதந்திரம் வேண்டும் என்பதற்காக போராடினோம். இதனால் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தோம். பொருளாதாரத்தை இழந்தோம். கல்வியைத் தொலைத்தோம். இன்று போதை வஸ்து என்கின்ற அரக்கனுக்குள் சிக்கி நிக்கின்றோம். ஒவ்வொரு முறையும் நாடு முன்னேறுகின்றபோது சுனாமி, புயல்கள் போன்றன வந்தன. எங்களை அழித்தன. கொரோனா வந்தும் எங்களை அழித்தது. நாங்கள் முன்னேறுகின்றோம் என்றபோதெல்லாம் எங்களுக்கு நெஞ்சில் அடி விழுந்தது. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு இந்த நாட்டை நாங்கள் முன்னேற்றவேண்டிய தேவையுள்ளது. என்றார். (க-66)

### வலுசக்தி அமைச்சர் மீதான

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இலங்கை தமிழரசுக் கட்சி எதிப்பு!

கொழும்பு, மார்ச் 19

வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிடப்போவதில்லை என இலங்கை தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. நாடாளுமன்றத்திலுள்ள கட்சி அலுவலகத்தில், நாடாளுமன்றக் குழுத்தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டது. வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக ஏற்கனவே நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, நீதிமன்றத்திலுள்ள விவகாரத்தில் அரசியல் ரீதியாகத் தலையிடுவதைத் தவிர்க்கக் கட்சி விரும்புகிறது. அமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள நிலக்கரி மோசடிக் குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் போதுமான மற்றும் வலுவான ஆதாரங்கள் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. நாட்டில் தற்போது எரிபொருள் நெருக்கடி நிலவிவருகிறது. இத்தருணத்தில் இவ்வாறான நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவருவது நிர்வாகச் சிக்கல்களை உருவாக்கி, மக்களை மேலும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கும் என கருதுவதாக தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது. (ச-இ)



# நிர்வாகத் தோல்வியால் மீண்டும் மின்வெட்டு!

## *எதிர்க்கட்சித் தலைவர் ஆரூடம்*

கொழும்பு, மார்ச் 19

அரசாங்கத்தின் முறையற்ற வலுச்சக்தி முகாமைத்துவம் மற்றும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் பின்னடைவு காரணமாக எதிர்வரும் ஏப்ரல் முதல் ஜூலை மாத காலப்பகுதிக்குள் நாடு மீண்டும் மின்வெட்டு அபாயத்தை எதிர்நோக்க நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வியெழுப்பியபோதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த சில நாள்களாக நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தித்திறன் குறைந்துள்ளது. இந்த மின் பற்றாக்குறையை ஈடுகட்ட டீசல் மின் நிலையங்களை நாடவேண்டியுள்ள நிலையில், நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு நிலைமையை மேலும் சிக்கலாக்கும். இரண்டு மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் இருப்பதாக ஜனாதிபதி கூறி 7 நாள்களிலேயே எரிபொருள் விலை உயர்த்தப்பட்டது ஏன்? ரஷ்யாவுக்கு வழங்கப்பட்ட தற்காலிக விலக்கைப் பயன்படுத்தி கச்சா எண்ணெய் பெற ஏன் பேச்சு நடத்தவில்லை? தற்போது வழங்கப்பட்டுள்ள வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு எவ்வித விஞ்ஞானபூர்வ அடிப்படையுமற்றது. இது மக்களின் அன்றாடத் தேவைக்குப் போதுமானதல்ல. எரிபொருள் மீதான வற் உள்ளிட்ட வரிகளை நீக்கி, குறைந்த விலையில் மக்களுக்கு எரிபொருளை வழங்கவேண்டும். அத்தியாவசியச் சேவைகளான மின் உற்பத்தி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துக்கு முன்னுரிமை அளிக்கும் தேசிய பொறிமுறையை உடனடியாக உருவாக்கவேண்டும் - என்றார். (ச-இ)

# எரிவாயுத் தட்டுப்பாட்டுக்கு போர்ச்சூழல் காரணமல்ல

## சாமர சம்பத் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 19

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்திய கிழக்கு போர்ச்சூழல் காரணமாக இருக்கலாம், ஆனால் எரிவாயுத் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகமே காரணம் என எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஓமான் நாட்டுடன் இருந்த எரிவாயு ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு, சுவிட்சர்லாந்து நிறுவனம் ஒன்றுடன் புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டதே இந்த நெருக்கடிக்குக் காரணம். 5 கப்பல்களைக் கொண்டிருந்த நிறுவனத்தை விடுத்து, வெறும் 2 கப்பல்களை மாத்திரம் கொண்ட நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்ததால் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை மத்திய கிழக்கு யுத்தத்துடன் தொடர்புபடுத்தக்கூடாது.

அரசாங்கம் என்ற ரீதியில் நெருக்கடிகள் வரும்போது அவற்றைத் தட்டிக்கழிக்காமல், சரியான முறையில் முகாமைத்துவம் செய்யவேண்டும் - என்றார். (ச-இ)



# உண்மையான போராளிக்கு ஓய்வில்லை அதனை நிரூபித்தவர் இரா. நல்லகண்ணு;

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 19

உண்மையான போராளி ஒரு போதும் ஓய்ந்திருக்க மாட்டான் என்பதற்கு மறைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் இரா. நல்லகண்ணு ஓர் எடுத்துக்காட்டு. அவரை முன்னுதாரணமாகக் கொண்டு எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாதையில் தொடர்ந்து நாம் முன்னேறுவோம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டினார். வாழ்நாள் போராளி இரா. நல்லகண்ணுவின் நினைவு நாள் நிகழ்வு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இரா. நல்லகண்ணு இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவர். பிரித்தானியாவின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய அவர், அதன் பின்னர் நிலப்பிரபுத்துவத்துக்கும், ஆண்டான் அடிமை முறைமைக்கும், சாதியத் தீண்டாமைக்கும், சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும் எதிராகப் போராடி வந்தார். இயற்கை வளங்களின் சுரண்டல்களுக்கு எதிராகப் போராடி வந்தார். அவர் ஈழத்தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் உளமார ஆதரித்தார். கடைசி மூச்சுவரை போராளியாகவே வாழ்ந்த அவரை தமிழகம் இன்று வாழ்நாள் போராளியாகப் போற்றுகின்றது. போராளிகளை நாங்கள் முன்னாள் போராளிகள் என்று அழைப்பது அவர்களின் போராட்ட வாழ்வைக் கொச்சைப்படுத்துவது போன்றதாகும். ஆயுதப் போராட்டம் இல்லை என்பதற்காக போராட்டக் குணாம்சமும் போய்விட்டதாக அர்த்தம் கொள்ள முடியாது- என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப் பூக்களால் உன்னை ஆராதிக்கும்
8 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

உன் அன்னை மடியில்
19 . 11 . 1939



உன் முருகன் கழல் அடியில்
17 . 03 . 2018

அமரர் புனிதவதி சந்திரசேகரம்

என் கண்ணீர் மலர் சொரிந்து
என் இனியவளே! நிதம் உன்னை ஆராதிக்கின்றேன்.
ஆண்டு எட்டுச் சென்றனவே! நீ
ஆண்டவன் கழல் அடி சேர்ந்து!
அன்பினால் அனைவரையும் கவர்ந்தவளே
என் இதயத் துடிப்பாய் இருந்தவளே!
ஏன் உன் இதயத் துடிப்பு அவசரமாய் நின்றது?
நான் வாழ் நாள் முழுவதும் அழுவதற்கா?
நான் காண்பதெல்லாம் உன் இனியமுகம்.
நான் கேட்பதெல்லாம் உன் இனிய குரல்.
நான் உணர்வதெல்லாம் உன் உயிர்மூச்சு.
நான் நினைப்பதெல்லாம் உன் பிரிவை!
ஆண்டுகள் எட்டு சென்றால் என்ன?
ஆயிரம் நாட்கள் நகர்ந்தால் என்ன?
எத்தனை மணித்துளிகள் சென்றால் என்ன?
என் நெஞ்சம் ஆறுமா உன் பிரிவை.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நிதம் உன்னை நினைந்துருகும்
உன் துணை
சந்திரசேகரம்
உன் பாச உறவுகளுடன்

இல. 21/4 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
19.03.2026

CS/31466) J-1

# குருபூஜை

யாழ்ப்பாணம்,மார்ச் 19

ஈழத்து மூத்த சித்தர் பரம்பரையைச் சேர்ந்த குழந்தைவேல் சுவாமிகளின் குருபூஜை நிகழ்வு இன்று வியாழக்கிழமை கீரிமலையிலுள்ள சுவாமிகளின் சமாதிச் சிவாலயத்தில் சைவபரிபாலன சபை, அகில இலங்கை சைவமகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

முற்பகல்10 மணி முதல் குருபூஜை வழிபாடுகளும், அதனைத் தொடர்ந்து மதியம் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (ச-66)

## Showroom for Rent

**3rd Cross street Junction, Main Street, A9 Road, Jaffna.**

Contact:-
**077 429 0613**

# மல்லாகத்தில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,மார்ச் 19

அமரர் சின்னத்தம்பி சௌந்தரராசாவின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு குருதிக்கொடை முகாம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மல்லாகம் கல்லாரை வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்கள் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-66)

# மகாஜனக் கல்லூரியில் மெய்வன்மைப்போட்டி


யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயமும் கமநல சேவையும் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மீன்பிடி நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதம கணக்காளர் ம.சிவகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ச-159-422)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 09 . 1947



மறைவு
18 . 03 . 2026

## சகுந்தலாதேவி தணிகாசலம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி பெருமாக்கடவை, இந்தியா - சென்னை, மடிப்பாக்கம் போன்ற இடங்களையும் தற்போது கொக்குவில் சம்பியன் லேனில் வசித்து வந்தவருமாகிய சகுந்தலாதேவி தணிகாசலம் அவர்கள் நேற்று (18.03.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அன்னம்மா - தம்பிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை தணிகாசலம் அவர்களின் அன்பு மனைவியும், சிறிகரன், காலஞ்சென்ற கிரிகரன் மற்றும் பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், லக்பா, நிஜருஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், லொக்சன், அக்சயன், ஆருசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நகுலாதேவி, மகாதேவன் மற்றும் கௌசலாதேவி, காலஞ்சென்றவர்களான பேரின்பதேவி, வாமதேவன் மற்றும் கிருஷ்ணகுமார் (ஜேர்மன்), சரோஜினிதேவி (சண்டிலிப்பாய்), உமாதேவி (கனடா), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆதவனின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.03.2026) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்**
சிறிகரன் - 074 364 0550
பிரபாகரன்- 071 130 1148

(cr.47247) (N-1)


# தவறவிடப்பட்டுள்ளது

சின்னையா முருகையா என்பவரது முக்கிய ஆவணங்களான தேசிய அடையாள அட்டை இல.(500694360 V), சாரதி அனுமதிப் பத்திரம், வாகன இன்சுரன்ஸ், Tax என்பன மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் 16.03.2026 திங்கட்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. யாரிடத்தில் கிடைக்கப்பெற்றாலும் அம்மன் ஆலய நிர்வாகத்தில் 077 838 7412 என்ற தொலைபேசியுடன் தொடர்புகொண்டு மிகவும் கருணையுடன் ஒப்படைக்கவும். அல்லது ஆவண உரித்துடைய 076 457 2535 எனும் தொலைபேசிக்கு அறியத்தரவும்.

(cs.9989) (N-1) சின்னையா முருகையா

இவ் வையகம் விட்டு மறைந்து ஆண்டுகள் 5 ஆனபோதும்
மறையாது எமக்குள் ஒளிரும் மொழி ஞாயிறு

மண்ணில்
08 . 02 . 1944



விண்ணில்
13 . 04 . 2021

## அமரர் K. C.சிவசுப்பிரமணியம்
(மொழி ஞாயிறு, ஆங்கில பேராசான்)

நீங்காத ஒலி...
கணித்துக்கொண்டிருக்கும் எதிரொலிகளில்
உங்கள் மொழி இன்றும் கேட்குதென்றோ
தனித்துப் போன உம் நாற்காலி இன்றும் கனக்குதென்றோ
உங்கள் வீட்டு மாமரங்கள் இன்றும்
உமக்காய் காய்க்குதென்றோ
உம் கடிகாரம் இன்றும்
ஒரு கையில் ஓடுமென்றோ
நீங்கள் கேட்டு இரசித்த வானொலி இன்றும்
கண்டம் தாண்டி பாடுதன்றோ !!!

பயின்று போன உம் மாணாக்கர் -செயற்கை
நுண்ணறிவில் உங்கள் அறிவை காண்பாரென்றோ !!!

மண்ணுலகை நீத்தும்
நீங்கள் எம் உள்ளம் நிலைத்தீரென்றோ
பெறாத பெற்ற பிள்ளைகள் உம்மை
இன்றும் நினைவு கூறுவரென்றோ
அறிவீரோ நீங்கள் என் - ஆசை அப்பா - ஆசான் இன்னும் பல....

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவமற்ற அரசால் மக்களுக்கே பாதிப்பு!

வஜிர சுட்டிக்காட்டு

காலி,மார்ச் 19
தற்போதைய அரசாங்கத்துக்கு நாட்டை நிர்வகிப்பதற்கான போதிய அனுபவம் இல்லாததால் மக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். உங்களால் முடியாவிட்டால் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச் செல்லவேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். காலியில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை நிர்வகிப்பவர்களுக்கு உலகளாவிய அரசியல் நகர்வுகள் மற்றும் பொருளாதார மாற்றங்கள் குறித்த அறிவு இருக்க வேண்டும். ஆனால் தற்போதைய ஆட்சியாளார்களிடம் அதற்கான திட்டமிடலோ அல்லது அனுபவமோ இல்லை. உலகத் தலைவர்களுடன் இராஜதந்திர ரீதியாகக் கையாண்டு பழகிய ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் வீட்டில் இருக்கச் சொன்னதன் விளைவை இப்போது நாடு அனுபவித்து வருகிறது - என்றார். (ச-இ)


## தேவை

களஞ்சியக் காப்பாளர், கூலியாட்கள், மில் வேலை தெரிந்தவர்கள், சாரதிகள்.
077 7722 215


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 27 . 04 . 1953



மறைவு 19 . 02 . 2026

கடந்த 19.02.2026 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரன்

### அமரர் நடராசா சடாதரன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 21.03.2026 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

"இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்"

சந்திரபுரம், மட்டுவில்.

குடும்பத்தினர்.
077 4412 420

(CS 31470) A

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
பரமேஸ்வரி அன்ரனி

(முன்னாள் ஓய்வு நிலை உப அதிபர் யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை)

தோற்றம் 11.02.1944

மறைவு 09.04.2024

அன்னையின் வளர்ப்பினில்
குறையொன்றும் கண்டிரோம்
காலங்கள் சென்றதும்
காவியமாகி விட்டீர்களே
தந்தையின் துயர் தீர முன்னரே
உங்கள் முகம் காணமுடியவில்லையே
நினைக்கும் இடமெல்லாம்
தந்தையும் தாயுமே
உங்களை நினைத்தே வாழும்

44, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/61000) J-1

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 11 . 1943



மறைவு 17 . 03 . 2026

### பொன்னுத்துரை கனகசேகரன்

யாழ்ப்பாணம் மாதனை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகசேகரன் கடந்த (17.03.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை அன்னபூரணம் ஆகியோரின் புதல்வனும், இராஜசேகரம் (லண்டன்) அவர்களின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை அழகம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், பிரேமாவதி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயரூபன் (கனடா), விஜயரூபன் (ஜேர்மனி), கவீந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரிகா (கனடா), சிந்துஜா (ஜேர்மனி), மதியழகன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருணிகா, அருணன், ஆருஜன், ஆர்த்திகா, ஆராதனா, பிரித்தா, அஸ்வின், விசாகன், அபிஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் குணரத்தினம், பத்மாவதி, லீலாவதி, புனிதவதி, இராஜரத்தினம், ரேவதி ஆகியோரின் மைத்துனரும், அமரர் லோகேஸ்வரி, அமரர் பேபி, கணேசலிங்கம், விஜயகாந்தன், அமரர் குணபாலசிங்கம், ஞானசௌந்தரி, சிறிகணேஸ்வரி, சிற்சமூர்த்தி ஆகியோரின் சகலனும், பிருந்தா, கருணா, சுவர்ணா, டயானா, தர்ஷன், பிரஷாந்தி, மீரா, கஜேந்தர், புகதீசன், அமரர் கயந்தி, விமலதாசன், சுகன்யா, சுதர்சன், தனுசியா ஆகியோரின் பெரிய தந்தையும், அமரர் ராஜ்வதன், சதீஸ்வரன், சகானா, லக்ஷிகா, டிவாகர், ஜிவாஸ்கர், டினேஷர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொன்னுச்சுவாமி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் 20.03.2026 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 723 8319

(CR 47248)A

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 03 . 1946.



மறைவு 18 . 03 . 2026

### ஆறுமுகம் துரைச்சாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

எருவன் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், பருத்தித்துறை வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் துரைச்சாமி அவர்கள் நேற்று (18.03.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் தெய்வேந்திரராணி (ஓய்வு பெற்ற அதிபர், யா / கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், செ.யுகாசினி (அபிவிருத்தி உத்தியோத்தர், பிரதேச செயலகம் தென்மராட்சி), தி.யாசினி ( ஆசிரியர் கிளி/முருகானந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செந்தூரன் (வங்கித் தொடர்பாடல் முகாமையாளர் யாழ்ப்பாணம், தேசிய அபிவிருத்தி வங்கி), திவாகர் (ஆசிரியர் கிளி/ பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தியாகராஜா (ஓய்வு பெற்ற சாரதி - பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் விசுவமடு), காலஞ்சென்ற யோகராசா ( முகாமையாளர் கூட்டுறவு வங்கி கொடிகாமம்) மற்றும் இராசரட்ணம் (கச்சாய்) தங்கராசா (பிரித்தானியா) செல்வராசா(கனடா), விமலாதேவி (சுவிஸ்), லீலாதேவி (கனடா), காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ரவீந்திரன் (பிரித்தானியா), ஞானசந்திரன் (கனடா), காலஞ்சென்ற அசோகன் மற்றும் தயாளன் (கனடா) மாலா (டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஜயாத்துரை (சிறாப்பர்), ராணிமலர் (கொடிகாமம்) செல்வராணி (ஓய்வு பெற்ற உப அதிபர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) விஜயரட்ணம் (நெல்லியடி), ஜெயரட்ணம் (யேர்மனி), சந்திரகலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சானுஜா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) சஜிவனி (யா / சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) சஷ்வின் (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசலை), சர்வின் (British business college சாவகச்சேரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.03.2026) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் கொடிகாமத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொடிகாமம் வேவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31471)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைப்பெட்டி திரைப்படம் யாழில் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 19

ஷிர்ஷேந்து முக்கோபாத்யாயவின் -வங்காள நாவலின் திரைவடிவமான, கொய்னர் தமிழ்மொழி மாற்றப்படமான நகைப்பெட்டி, யாழ்ப்பாணத் திரைப்படக்கழகத்தால் இலவசமாகக் காட்சிப்படுத்தப் படவுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இந்த திரைப் படம் காட்சிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் ச.அகிலன் தலைமையில் இடம் பெற்றது . நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.சுந்தரலிங்கம் பங்கேற்றார். (ச-159)



முல்லைத்தீவு கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகாவித்தியாலத்தின் இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை முதல்வர் திருமதி சி.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகன் கலந்து கொண்டார். (ச-19)



## வல்வை வைத்தீஸ்வரர் ஆலயக் கொடியேற்றம்!

யாழ்ப்பாணம்.மார்ச் 19

வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


தொடர்ந்து வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இரதோற்சவம் இடம்பெற்று மறுநாள் ஏப்ரல் முதலாம் திகதி புதன் கிழமைஊரணிதீர்த்தக்கடற்கரையில் சமுத்திரத் தீர்த்தம் இடம் பெற்று அன்று மாலை கொடியிறக்கம் இடம்பெற உள்ளது. (ச-100)



பருத்தித்துறை கற்கோவளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக ரூபா 65ஆயிரம் ரூபா பெறுமதியான 6 புதிய மின்விளக்குகள் அண்மையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் வழங்கப்பட்டன. பருத்தித்துறை நகரபிதா வி. டக்ளஸ்போல் மற்றும் நகரசபை உறுப்பினர் சி.பொன்னம்பலம் ஆகியோர் கற்கோவளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரிடம் இவற்றை நேரில் வழங்கிவைத்தனர். (ச-100)



யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் கல்லூரி தினம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கூட்டுத்திருப்பலியாக யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் கல்லூரி சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ச-20)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அல்வாயில் துயரம்

# இளம் சட்டத்தரணி மாரடைப்பால் சாவு



யாழ்ப்பாணம், மார்ச் 19
யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் பகுதியில், இளம் சட்டத்தரணியொருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். சிவராசா நிகாஷ் (வயது - 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் தனது பணி முடித்து வீடு திரும்பிய குறித்த சட்டத்தரணி நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளதாக மனைவியிடம் கூறியுள்ளார். இரவு 7 மணியளவில் திடீர் சுகவீனமுற்ற நிலையில், தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (ம-66)

# பொலிஸார் பெயரில் போலியான பதிவுகள்

*பொதுமக்களுக்கு எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 19
'இலங்கை காவல்துறை தலைமையகத்தின் விழிப்புணர்வு' என்ற தலைப்பில் சமூக வலைத்தளங் களில் பகிரப்படும் சில பதிவுகள் போலியானவை எனப் பொலிஸ் தலைமையகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.
பொதுமக்களுக்கு வழிகாட்டல் வழங்குவதாகக் கூறி பகிரப்படும் இத்தகைய பதிவுகளால் மக்கள் ஏமாற்றமடையவேண்டாம் எனப் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். பொலிஸ் தலைமையகத்தின் அனைத்து உத்தியோகபூர்வ விழிப்புணர்வுச் செய்திகளும் பொலிஸ் ஊடகப் பிரிவால் மட்டுமே வெளியிடப்படும்.
உத்தியோகபூர்வ செய்திகள் அனைத்தும் பொலிஸ் தலைமையகத்தின் முறையான கடிதத் தலைப் பிலேயே ஊடக அறிக்கைகளாக வெளியிடப்படும். பொலிஸாரால் வெளியிடப்பட்டது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்கி, போலித் தகவல்களைப் பரப்புபவர்கள் தொடர்பாகத் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனப் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (எ-இ)

## கோத்தாபய...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் பொருளாதாரம் பேரழிவு நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. ஆனால், ஜனாதிபதி அநுர உண்மைகளை மறைத்து பொய்களைக்கூறி மக்களைத் திசைதிருப்பி வருகின்றார். விதம் விதமாகப் பொய்களைக் கூறுவதால் ஆட்சியை நீண்டகாலம் தக்கவைக்க முடியாது என்பதே உண்மையாகும். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் தவறான பொருளாதாரக் கொள்கையால், அவர் நாட்டைவிட்டுத் தப்பியோட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதைவிட மோசமான நிலைமை அநுரவுக்கு ஏற்படும். அவர் தப்பியோடுவதற்கு எந்தவொரு இடமும் இருக்காது.
ரணில் விக்கிரமசிங்க பெரும் பாடுபட்டுச் சேகரித்து வைத்திருந்த 6 பில்லியன் டொலரே தற்போது நாட்டில் எஞ்சியுள்ளது. அதைத்தவிர தற்போதைய அரசாங்கத்திடம் எந்தவொரு நிதி முகாமைத்துவமும் இல்லை.
எதனையும் கண்மூடித்தனமாக நம்பும் சிந்திக்கும் திறனற்ற மக்கள் இருக்கும் நாடு ஒருபோதும் முன்னேறப் போவதில்லை. இந்த உண்மையை மக்கள் உணர வேண்டும். அரசாங்கம் எதைக் கையிலெடுத்தாலும் அதில் தோல்வியே மிஞ்சுகிறது என்பதற்கு எரிவாயு விநியோகம் மற்றும் 'கியூ.ஆர்.' முறைமையே சாட்சி. நாட்டில் போதுமான அளவு எரிபொருள் உள்ளது என்றால் ஏன் இன்னும் வரிசைகள் காணப்படுகின்றன? சவால்களை எதிர்கொள்ளும் திறன் தற்போதைய அரசாங்கத்துக்கு இல்லை - என்றார். (அ-ம-44)

## மின்...

கோரப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் விதிகளுக்கு அமைய, இலங்கை மின்சாரசபை இந்த முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளது. இந்த முன்மொழிவு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆய்வில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வாகன...

தெரிவித்ததாவது:-
எரிபொருள் விநியோக சவால்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்காக, வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்துக்கு அமையவே இனி எரிபொருள் விநியோகம் நடைமுறைக்கு வரும். வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் இரட்டை எண்களாக அல்லது பூச்சியமாக (0, 2, 4, 6, 8) முடிவடையும் வாகனங்களுக்கு இரட்டை எண்களைக் கொண்ட திகதிகளில் (உதாரணமாக: மார்ச் 18, 20, 22) எரிபொருள் விநியோகிக்கப்படும். வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கம் ஒற்றை எண்களாக (1, 3, 5, 7, 9) முடிவடையும் வாகனங்களுக்கு ஒற்றை எண்களைக் கொண்ட திகதிகளில் (உதாரணமாக: மார்ச் 19, 21, 23) எரிபொருள் விநியோகிக்கப்படும் - என்றார். (அ-ம-17)

## காங்கேசன்...

கப்பற் போக்குவரத்து இடம்பெற்று வருகின்றது. கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவை சீரற்ற காலநிலை காரணமாக வருட இறுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வருடத்தின் ஆரம்பத்தில் மீண்டும் சேவைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், தொடர்ச்சியாக இழுபறிநிலை நீடித்தது. கடந்த 6ஆம் திகதியே மீண்டும் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், மறுநாள் இயந்திரக் கோளாறு காரணமாக சேவைகள் தடைப்பட்ட நிலையில், பத்து நாள்களின் பின்னர் நேற்று சேவைகள் இடம்பெற்றுள்ளன. நேற்றையதினம் நாகப்பட்டினத்தில் இருந்து 93 பயணிகளும், காங்கேசன்துறையில் இருந்து 44 பயணிகளும் பயணித்துள்ளனர்.
இன்று மீண்டும் சேவைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பயணம் தடைப்படச் சாத்தியம் உள்ளதாகவும் தெரியவருகின்றது. இதையடுத்து, புதிய கப்பலொன்றை சேவையில் ஈடுபடுத்தி இந்த நெருக்கடியைத் தீர்த்து வைக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-100)

## வடக்கு...

எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடும் வெப்பமான காலநிலை தற்போது நீடித்து வருகின்றது. வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று வெப்பநிலை மேலும் உக்கிரம் பெறும். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தில் இருக்கும். எனவே, பொதுமக்கள் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் - என்றுள்ளது. (அ-ம)

## கதிர்காமத்தில்...

துக்கு உள்ளானதில் நான்கு பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.
கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கிப் பயணித்த பேருந்தும், திஸ்ஸமஹாராமவில் இருந்து கராப்பிட்டிய நோக்கிப் பயணித்த பேருந்துமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. நான்கு பயணிகள் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர். நாற்பது பயணிகள் காயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், அவர்களில் பலர் உயிர்காப்புச் சிகிச்சைக்குப் பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
படுகாயமடைந்தவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம)

## விசாரணைகளை...

களும் முன்னெடுக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. அத்துடன், தேசியக் கொடியைக் கீழிறக்கி, அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடியும் ஏற்றப்பட்டது. இதை, 'நாட்டின் இறைமைக்கு குந்தகம் விளைவிக்கும் குற்றம்' என்று கருதி தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.
துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்ட நிர்வாக மட்டங்களில் ஏற்கனவே விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில், பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் தற்போது விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிராகவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இன்று காலை 10 மணி முதல் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-26)

## எரிசக்தி...

காரணம். இந்த நெருக்கடிகளுக்குப் பொறுப்பேற்று அவர் பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செயற்படவில்லை. இதையடுத்தே, எரிசக்தி அமைச்சருக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரவுள்ளோம். எனினும், எதிர்வரும் அமர்வில் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமா என சபாநாயகரின் அறிவிப்புக்குப் பின்னரே உறுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## புதன்கிழமை...

பேராசிரியர் வசந்த அத்துகோரல வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உலகளாவிய போரின் விளைவாகவே நாட்டில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடிகள் காரணமாக, வீட்டிலிருந்து பணியாற்றும் நடைமுறையைப் பின்பற்றுவதற்கு பல நாடுகள் முன்வந்துள்ளன. இலங்கையிலும் அத்தகைய முறைமையே பின்பற்றப்பட வேண்டும்.
புதன்கிழமைகளைப் பொதுவிடுமுறையாக அறிவித்தமை தவறான அணுகுமுறையாக அமைந்துள்ளது. பொது விடுமுறை வழங்கப்பட்டுள்ளதால், அந்த நாளை அரச ஊழியர்கள் தங்களின் தனிப்பட்ட பயணங்களுக்குப் பயன்படுத்துகின்றனர். இதனால், எரிபொருள் எவ்வாறு மிச்சமாகும்? இந்தத் திட்டம், எரிசக்தியைச் சேமிக்கும் அரசாங்கத்தின் இலக்கை அடைய உதவாது.
அரச ஊழியர்கள் தங்கள் கடமைகளை வீட்டிலிருந்தே செய்யும் முறைக்கு வழி நடத்தப்பட்டால், அவர்களால் ஆற்றலைச் சேமிக்க முடிவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் நிர்வாக, பொருளாதார நடவடிக்கைகளையும் தடையின்றிப் மேற்கொள்ள முடியும். ஓர் ஊழியருக்கு ஒதுக்கப்பட்ட பணியை வீட்டிலிருந்து நிறைவேற்ற அனுமதிப்பதன் மூலம், அலுவலகங்களை அன்றாடம் நடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரம், தண்ணீர் மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் செலவைக் குறைக்க உலகின் பல நாடுகள் முயற்சிக்கின்றன. நாமும் இது போன்ற புதிய முறைகளைக் கையாள வேண்டும் - என்றார். (அ-ம)

## பாதுகாப்பு...

களை விடுவிக்குமாறு வலியுறுத்தி, நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அண்மையில் ஜனாதிபதி அநுரவுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். இதையடுத்தே, கேப்பாபிலவு பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொண்டு அறிக்கை வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோகனதாஸ் சனசமூக நிலைய ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18
மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் 78ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. சனசமூக நிலையத் தலைவர் ந.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன், யாழ்.போதனா மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் மருத்துவ நிபுணர் கந்தையா மணிதீபன், நவாலி ஆரோக்கியவாசக மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் லியோன் புஷ்பராணி, மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் சொலமன் யேசுதாஸ் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க-66)

# மாணவிகள் தொடர்பில் 'ரிக்ரொக்'கில் அவதூறு

## மாணவன் சீர்திருத்தப்பள்ளியில் அவருடைய தந்தைக்கு மறியல்

பாடசாலை மாணவிகள் மற்றும் மாணவி ஒருவரின் தாயார் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் கீழ்த்தரமான பதிவுகளை மேற்கொண்ட மாணவன் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால், சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளான். இந்தச் செயற்பாட்டுக்காக நீதிகேட்டுச் சென்றவர்கள் மீது வாள்வெட்டுத்தாக்குதலை நடத்திய மாணவனின் தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

வேலணை பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன், சாதாரண தர கணித பாடத்தில் சித்தி பெறாதமையால் அதற்காகப் பிரத்தியேக வகுப்புக்குச் சென்றுள்ளான். அந்த வகுப்பில் கற்கும் மாணவர்களின் 'வட்ஸ் அப்' குழுவில் உள்ள மாணவிகளின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக இரு மாணவிகளின் ஒளிப்படங்களையும், இன்னொரு மாணவியின் தாயாரின் ஒளிப்படத்தையும் (ஒரு மாணவி தனது தாயாரின் இலக்கம் ஊடாகவே குழுவில் இணைந்திருந்தார்) எடுத்து அவர்களைத் தவறானவர்கள் என பரப்புரை செய்து ரிக்ரொக்கில் பதிவிட்டுள்ளான். அந்தப் பதிவில் குறித்த மாணவியின் தாயாரின் இலக்கமும் இணைக்கப்பட்டதால், தவறான நோக்குடன் அவருக்கு ஏராளமான அழைப்புகள் சென்றுள்ளன. இதையடுத்து, மாணவியின் மூத்த சகோதரன் அது தொடர்பில் விசாரித்து, அந்த ரிக்ரொக் தளத்துக்கு உரிய மாணவனை உறுதிப்படுத்தி அவனுடைய வீட்டுக்கு தனது நண்பர்களுடன் நீதிகேட்கச் சென்றுள்ளார். மாணவனின் செயற்பாடுகள் தொடர்பில் அவருடைய தந்தையிடம் முறையிட்டதுடன், அலைபேசியை ஆதாரமாக வைத்து மாணவனுக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு வழங்கப் போவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதையடுத்து, அவர்களுடன் முரண்பட்ட மாணவனின் தந்தை நீதிகேட்டுச் சென்றவர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், தனது மகனை மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்த முற்பட்டதாக பொலிஸாரிடம் 'முந்திக்கொண்டு' முறைப்பாடு வழங்கியுள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கையில் இறங்கிய ஊர்காவற்றுறை பொலிஸார் மாணவனின் வீட்டிற்கு சென்ற இளைஞர் ஒருவரை கைதுசெய்ததுடன், அவரை நீதிமன்றத்திலும் முற்படுத்தி விளக்கமறியலில் வைத்தனர்.

மறுநாள் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞனுக்கு எதிராக பொய்யான முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மாணவிகள் தொடர்பில் ரிக் ரொக் தளத்தில் பரப்பப்பட்ட தகவல் தொடர்பில் நியாயம் கேட்க சென்றவேளை வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் நீதிமன்றுக்கு கூறியதைத் தொடர்ந்து, அவரை மன்று பிணையில் விடுவித்துள்ளது.

மாணவனுக்கும் அவருடைய தந்தைக்கும் எதிராக வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய, அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில், அந்த இருவரும் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த மன்று, வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய மாணவனின் தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைத்ததுடன், மாணவனை சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்புமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் பொலிஸார் ஆரம்பத்தில் தம்மிடம் முறைப்பாடு பெறவில்லை என்றும், இழுத்தடிக்கும் வகையில் செயற்பட்டனர் என்றும் பாதிக்கப்பட்ட மாணவிகளின் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், சந்தேகநபர்களுக்கு எதிராக முறைப்பாடு வழங்கப்பட்டு 20 நாள்களின் பின்னரே கைது நடவடிக்கை இடம்பெற்றமை குறித்தும் மாணவிகளின் தரப்பினர் பலத்த சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர். (ம-26)

# அல்வாய் மகாத்மா கிராமத்தில் உற்பத்தித்திறன் மாதிரித்திட்டம்

கிளீன் ஸ்ரீலங்காத் திட்டத்துக்கு இணையாகச் செயற்படுத்தப்படும், சமூக உற்பத்தித்திறன் மாதிரிக் கிராமத்திட்டத்தின் கழ், வடமராட்சி வடக்கு ஜே400 கிராம அலுவலர் பிரிவிலுள்ள அல்வாய் வடக்கு மகாத்மா கிராமம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு, வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் நடராசா திருலிங்க நாதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. திட்டத்துக்கான பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் திரை நீக்கம் செய்தார். தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன், வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் நடராசா திருலிங்கநாதன், ஜே 400 கிராம அலுவலர் எஸ்.வினோத் ஆகியோர் கருத்துரைகளை ஆற்றினர். (க-66)





# உற்பத்தித்திறன் மாதிரித்திட்டம் பூம்புகார் கிராமத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19
சமூக உற்பத்தித்திறன் திட்டத்தில், நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பூம்புகார் கிராமத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு, பூம்புகார் அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனின் பங்கேற்புடன் இடம்பெற்ற நிகழ்வில், நல்லூர்ப் பிரதேச செயலர் யசோதா உதயகுமார் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தின் கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் கீழ், கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம், தெரிவுசெய்யப்பட்ட சமூக உற்பத்தித் திறன் மாதிரிக்கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (க-17)



# இரா.நல்லகண்ணுவுக்கு யாழில் நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், மார்ச் 18
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் இரா.நல்லகண்ணுவின் நினைவஞ்சலி, நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், இரா.நல்ல கண்ணுவின் உருவப்படத்துக்குச் சுடர்கள் ஏற்றி உணர்வு பூர்வ அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அரசியல், சமூக ஆய்வாளர் ம.நிலாந்தன், சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர். (க-66)

**வாகன சாரதி தேவை**

ஓட்டோகியர் வாகனம் ஓட்டக்கூடிய சாரதி தேவை. உரும்பிராய், கோப்பாய், திருநெல்வேலி, கொக்குவில் போன்ற இடங்களில் வதிபவர்கள் விரும்பத்தக்கது.
இளைப்பாறிய சாரதிகளும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:-
077 790 5438, 021 205 3982
(CS/61007) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org